அனுப்புநர்:

உறுப்பினர் செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எண்.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.

பெறுநர்:

திரு சென்னை ஆர்ச் பிடேப்,
2சி, சாந்தோம் சாலை நெடுஞ்சாலை,
சாந்தோம்,
சென்னை- 600004

---

**கடித எண்.சி4/12461/2002, நாள்:29.11.2006.**

அய்யா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் - திட்ட அனுமதி - அடித்தளம் வாகன நிறுத்துத்தளம், தரைத்தளம் 3மேல் தளங்கள் கொண்ட குடியிருப்பு - நில அளவை எண்.2420/1, 2421/2,1, பகுதி எண்.49, மைலாப்பூர் கிராமம், கதவு எண்.2சி, சாந்தோம், சென்னை - வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவது - தொடர்பாக.

பார்வை: 1. ஆணையாளர், சென்னை மாநகராட்சி கடித எண்.டி10/பிபிஎ/1568/2002 இல் 28.3.2002 அன்று கிடைக்கப்பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. இதே எண் கொண்ட இவ்வலுவலகத்தின் கடித எண்.

-----

நில அளவை எண்.2420/1, 2421/1,2, பகுதி எண்.49, மைலாப்பூர் கிராமத்தில் கதவு எண்.2சி, சாந்தோம் நெடுஞ்சாலை, சாந்தோம், சென்னை- இல் தரைத்தளம் 3மேல் தளங்கள் கொண்ட குடியிருப்பு உத்தேச கட்டிடத்திற்கு அனுமதி கொடுப்பது/ஏற்கனவே உள்ள கட்டிடத்தை வரன்முறை செய்வ தொடர்பான தங்களது விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது. இவ்விண்ணப்பத்தை மேற்கொண்டு, பரிசீலிப்பதற்கு கீழ்கண்ட கட்டணங்களுக்காக, உறுப்பினர்-செயலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எடுக்கப்பட்ட இரண்டு தனித்தனி வரைவோலைகளை இவ்வலுவலகத்தில் உள்ள கணக்குப்பிரிவில் செலுத்தி, அதன் நகல் ரசீதை இப்பிரிவில் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | நிலம் மற்றும் கட்டிட வளர்ச்சிக் கட்டணம் தமிழ்நாடு வளர்ச்சி மற்றும் வரமைப்புச் சட்டம் 1971 இல் பிரிவு 59-ன் கீழ்) | : ரூ. 7,000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) |
| 2. | காப்புறுதிக் கட்டணம் (உத்தேச வளர்ச்சிக்காக. | : ரூ. 49,000/- (ரூபாய் நாற்பத்தி ஒன்றாயிரம் மட்டும்) |

குறிப்பு: (கட்டிடத்தை அனுமதிபெற்ற வரைபடத்தில் உள்ளவாறு கட்டி முடித்து முடிவு சான்றிதழுக்காக விண்ணப்பித்து, அது கொடுக்கப்பட்ட பிறகு இக்காப்புறுதிக் கட்டணம் வட்டியின்றி திருப்பியளிக்கப்படும். அனுமதி பெற்ற வரைபடத்திலிருந்து மாறுதல்/விதிமீறல்/உபயோக மாறுதல்கள் இருந்தால் காப்புறுதிக் கட்டணம் முழுமையாகப் பிடித்தம் செய்யப்படும்.

விண்ணப்பதாரர் காப்புறுதிக் கட்டணம் செலுத்திய 5 ஆண்டுகளுக்குள் முடிவுச் சான்றிதழுக்காக விண்ணப்பிக்கவில்லை என்றால், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி காப்புறுதிக் கட்டணம் முழுமையாகப் பிடித்தம் செய்யப்படும்.

2. இக்கடிதம் அனுப்பப்பட்ட நாளிலிருந்து 50 நாட்களுக்குப்பின் பணத்தைச் செலுத்தினால் அதற்கு ஆண்டிற்கு 12% (மாதத்திற்கு 1%) வட்டி செலுத்த வேண்டும். இவ்வட்டி இக்கடிதம் அனுப்பப்பட்ட நாளிற்குப் பிறகு முடிந்த ஒவ்வொரு மாதத்திற்கும் கணக்கிடப்படும். இவ்வட்டிப் பணத்தை இக்கட்டணங்களுடன் சேர்த்துக் கட்ட வேண்டும்.

3. இக்கடிதம் அனுப்பப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பணத்தைச் செலுத்தாவிட்டால் இவ்விண்ணப்பம் அனுமதி தரப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

4. கீழ்கண்டவற்றையும் நிறைவேற்றும்படி தாங்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

..2..

அ) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அறிவித்துள்ள மழைநீர் சேகரிப்பு முறையைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

ஆ) புதிய கட்டிடத்தில் கட்டப்படும் மேல்நிலை நீர்த்தொட்டிகளும் கிணறுகளும் கொசுக்களைத் தடுக்கும் விதத்தில் நன்றாக மூடப் பட்டிருக்க வேண்டும்.

இ) மேற்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அனுமதி பெற்ற வரைபடம் செல்லாததாகக் கருதப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் அறிவிக்கப்பட்டிருக்கும் மழைநீர் சேகரிப்பு முறைகள் வசதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

சென்னைக் குடிநீர் வாரியத்தில் தீர்மானம் 416/96-ல் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கட்டணம் (விதித்தல் மற்றும் வசூலித்தல்) விதி 1998-இல் இக்கட்டணத்தை வசூலிக்க, சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு அனுப்பச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

5. வரைப்படத் தொகுதிகளின் நான்கு நகல்கள்.

6. இக்கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்து கட்டணங்களைச் செலுத்துவதைப் பொறுத்தும் தான் திட்ட அனுமதி வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பதாரர் செலுத்திய கட்டணங்களைப் பெற்றுக் கொண்டதாலேயே திட்ட அனுமதி பெறும் உரிமையைப் பெற்றுவிடமுடியாது. பிற நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் திட்ட அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் கட்டுமானத் தைத் தொடங்காமல் விண்ணப்பதாரர் பணத்தைக் கேட்டு விண்ணப்பித்தால் கூர்ந்தாய்வுக் கட்டணத்தைத் தவிர செலுத்தப்பட்ட வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் திருப்பித் தரப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

உறுப்பினர் - செயலருக்காக.

**நகல்:**

1. முதுநிலைக் கணக்கு அதிகாரி,
   கணக்குப் (பிரதான) பிரிவு,
   செ.பெ.வ.குழுமம்,
   சென்னை-600 008.

2. ஆணையர்,
   சென்னை மாநகராட்சி,
   சென்னை-600 003.

எஸ்டி/1/12.